www.Padasalai.Net www.CBSEtips.in

FTM

10 ஆம் வகுப்பு

# காலாண்டுத் தேர்வு - 2023

## தமிழ்

காலம் : 3.00 மணி மதுரை - 19.09.23 மதிப்பெண்கள் : 100

பகுதி - I (மதிப்பெண்கள் : 15)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 15 X 1 = 15

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ........
அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

2. "சிந்துக்குத் தந்தை" எனப் புகழப்படுபவர் யார்?
அ) பெருஞ்சித்திரனார் ஆ) தமிழழகனார் இ) கவிமணி ஈ) பாரதியார்

3. கீழ்க்காண்பனவற்றுள் பண்புத்தொகை அல்லாத தொகைநிலைத் தொடர் எது?
அ) செங்காந்தள் ஆ) தங்கமீன்கள் இ) வட்டத்தொட்டி ஈ) இன்மொழி

4. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன்
அ) பெப்பர் ஆ) இலா இ) வாட்சன் ஈ) லிசா

6. இலக்கணமுறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ..........
அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) உலக வழக்கு

7. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி
அ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

8. "காமராசர் நகர் எங்கே இருக்கிறது? என்ற வினாவிற்கு இந்த வழியாகச் செல்லுங்கள்" என்று விடையளிப்பது ..... இதில் இடம் பெறும் வினா வகை விடை வகையைக் கண்டறிக.
அ) அறியா வினா, ஏவல் விடை ஆ) அறியா வினா, சுட்டு விடை
இ) அறிவினா, சுட்டுவிடை ஈ) ஏவல் வினா, மறை விடை

9. 'நீதிநெறி விளக்கம்' என்னும் நூலின் ஆசிரியர் ..........
அ) அதிவீரராம பாண்டியர் ஆ) குமரகுருபரர்
இ) பரஞ்சோதிமுனிவர் ஈ) குலசேகர ஆழ்வார்

Greentamil.in
97861 41410

10. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ள உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

11. 'தேவதுந்துபி' - எந்த ஆட்டத்திற்குரிய இசைக் கருவி?
அ) ஒயிலாட்டம் ஆ) கரகாட்டம் இ) தேவராட்டம் ஈ) மயிலாட்டம்

***பாடலைப் படித்து விடை தருக.***

விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்
வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?

அ) நறுந்தொகை ஆ) விவேக சிந்தாமணி

இ) காசிக் காண்டம் ஈ) வெற்றிவேற்கை

13. 'நன்மொழி' என்பதன் இலக்கணக் குறிப்பை எழுதுக.

அ) வினைத் தொகை ஆ) பண்புத் தொகை

இ) உவமைத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

14. எதுகைத் தொடையைக் கண்டறிந்து எழுதுக.

அ) விருந்தினன், வியத்தல் ஆ) விருந்தினனாக, திருந்துற

இ) உரைத்தல், செப்பல் ஈ) திருந்துற, எழுதல்

15. 'விருந்தினன்' என்னும் சொல்லின் பொருள்

அ) உறவினர் ஆ) புதியவர் இ) நண்பர் ஈ) பகைவர்

பகுதி - II (மதிப்பெண் 18) பிரிவு - 1 4 X 2 = 8

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 21 வது வினா கட்டாய வினா.**

16. ***விடைக்கேற்ற வினா அமைக்க.***

அ) ஜுன் 15 ஆம் நாளை உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

ஆ) பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

17. "மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

18. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.

19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20. கம்பர் இயற்றிய நூல்கள் நான்கினைக் கூறுக.

21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

Greentamil.in

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.** 5 X 2= 10

22. ***வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.***

அ) ஊட்டமிடு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.

ஆ) நேற்று என்னை சந்தித்தார். அவர் என் நண்பர்.

23. ***இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.***

அ) மலை - மாலை ஆ) சிறு - சீறு

24. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

அ) பசுமையான ......ஐக் ....... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)

ஆ) காட்டு விலங்குகளைச் ..... தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் ....... திருந்த உதவுகிறது. ***(சுட்டல், சுடுதல்)***

25. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.

அ) ........., மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம். ஆ) வெயிலில் அலையாதே. உடல் .........

26. ***கலைச்சொற்கள் தருக.***

அ) Epic literature ஆ) Intellectual



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

27. பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது. ஐயங்களை நீக்குகிறது பழைய தவறான புரிதல்களை நீக்குகிறது. எண்ணங்களை மாற்றுகிறது.

28. பகுபத உறுப்பிலக்கணம் தருக - "பொறித்த".க

**பகுதி - III (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 2 X 3 = 6

29. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" - வினவுவது ஏன்?

30. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

Greentamil.in

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

31. சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் 1988 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இங்கு பத்துக் காட்சிக் கூடங்கள் உள்ளன. பரிணாம வளர்ச்சிப் பூங்கா, புதிய புதிப்பிக்கத்தக்க ஆற்றல் பூங்கா, இயந்திரவியல் பூங்கா முதலியவை இங்கு உள்ளன.

அ) பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது?

ஆ) மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள இரு பூங்காக்களின் பெயர்களை எழுதுக.

இ) கோட்டூர்புரத்தில் உள்ள தொழில்நுட்ப வளாகத்தில் எத்தனை காட்சிக் கூடங்கள் உள்ளன?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 34-வது வினா கட்டாய வினா.** 2 X 3 = 6

32. தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.

33. பெரியாரைத் துணைக்கொள்வதால் பெறும் நன்மைகளாக வள்ளுவர் கூறுவன யாவை?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'சிறுதாம்பு தொடுத்த' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு. *(அல்லது)*

ஆ) 'வாளால் அறுத்து' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2 X 3 = 6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின்வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36. அகப்பொருள் கூறும் அறுவகைப் பெரும் பொழுதுகளையும், சிறுபொழுதுகளையும் பட்டியலிடுக.

37. உவமை அணியைச் சான்றுடன்விளக்குக. *(அல்லது)*

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

**பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு :** தேர்வர் கடிதம் /படிவம் ஆகியவற்றை எழுதும்போது கீழ்க்காணும் முகவரியைத் தன்னுடைதாகக் கொள்க. (க.நெடுமாறன், த/பெ. ஆ.கலையரசன், 12, எழுத்தாணிக்காரத் தெரு, மதுரை - 625001)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 5 = 25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. *(அல்லது)*

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

39. அ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. ***(அல்லது)***

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. ***காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.***

Greentamil.in



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி, திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன், எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி. இவர்களை நெறிப்படுத்த நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியலிடுக. ***(அல்லது)***

***ஆ) மொழி பெயர்க்க :***

Therukoothu is as its name indicates, a popular form of theatre performed in th street. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabhartha and other ancient puranas. There are more songs in the play with dialogus improved by the artists on the spot. Fiteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress them selves with heavy custumesand bright makeup. Koothu is very popular among rural areas.

## பகுதி - V (மதிப்பெண் 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக. ***(அல்லது)***

ஆ) நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள்- அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. ***(அல்லது)***

ஆ) 'கற்கை நன்றே கற்கை நன்றே' என்கிறது. வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) இளமையும் கல்வியும் - விண்வெளிப் பயணம் - சாதனைப்பெண் - விருதுகள் ஆகிய குறிப்புகளைப் பயன்படுத்தி 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.
***(அல்லது)***

ஆ) பல்துறை அரங்குகள் - அங்காடிகள் - கேளிக்கை விளையாட்டுகள் - பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் முதலிய தலைப்புகளில் நீங்கள் அரசுப்பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com